பக்கங்கள் 16+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 17 சனிக்கிழமை 01.03.2025 | அதிர்வு 210

## தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு கிடைக்குமா?

### ஒரு வாரத்துக்குள் அரசு பதில்


சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய முடியுமா என

03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# மீண்டும் கூட்டமைப்பு: தமிழரசு கடும் முயற்சி

## பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு சி.வி.கே. கடிதம் மூலம் அழைப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய நான்கு கட்சிகளும் தமிழினத்தின் நலன் கருதி மீண்டும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம், இது தொடர்பில் நேரில் பேசுவதற்குக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளாக இருந்து பின்னர் பிரிந்து சென்ற ரெலோ, புளொட் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய கட்சிகளுக்குக் கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் கட்சியின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோருக்கே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

03


இலங்கைத் தமிழரசுக் கட்சி

LANKA TAMIL ARASU KADCHI

## நோயாளர்களின் நலன் கருதி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ள வைத்தியர்கள் முடிவு!

### யாழ். போதனாவில் இன்று முதல் வழமைக்குத் திரும்பிய மருத்துவ சேவைகள்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருத்துவ சேவைகள் கடந்த இரண்டு நாட்களின் பின்னர் இன்று வழமைக்குத் திரும்பியுள்ளன.

வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தால் நோயாளர்கள் பெரும் அவதியை எதிர்நோக்கி இருந்த நிலையில் இன்று முதல் மீண்டும் வைத்தியர்கள் சேவைக்குத் திரும்பியுள்ளமையை நோயாளர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர்.

03



# வடக்கில் படைகள் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்படும்!

## சிறீதரனின் கேள்விக்குப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் பதில்



வடக்கில் படையினர் வசமுள்ள காணிகளில் மிக அத்தியாவசிய மானவைத் தவிர ஏனையவற்றை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படும் என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர தெரிவித்தார்.

பாதீட்டில் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடை பெற்ற குழுநிலை விவாதத்தில் உரை யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"வடக்கு, கிழக்கிள் உள்ள முகாம் கள் மற்றும் படையினர் பயன்படுத்தும் காணிகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் (சிறீதரன்) கருத்து வெளி யிட்டிருந்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் நடைபெற்ற பாதுகாப்புசார் ஆலோச னைக்குழு கூட்டத்திலும் இந்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

எனவே, மிகவும் அத்தியாவசியமான காணியை மட்டும் வைத்துக்கொண்டு, ஏனையவற்றை விடுவிப்பதற்கு நடவ டிக்கை எடுக்கப்படும். பல வருடங் களாக மூடப்பட்டிருந்த பலாலி, அச்சு வேலி வீதி திறக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நாடாளுமன்ற உறுப் பினர் (சிறீதரன்) கூறியதுபோல் வடக்கு, கிழக்கில் 3 இலட்சத்து 17 ஆயிரம் படையினர் இல்லை. முப்படைகளிலும் மொத்தமாக 2 இலட்சத்துக்கும் குறை வான படையினரே தற்போதுள்ள னர்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்து வதற்காக நாடு முழுவதும் முப்படை யினர், பொலிஸாரை நாம் ஈடுபடுத்தி யுள்ளோம்." - என்றார்.



# எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இன்றும் நீண்ட வரிசை!

இலங்கையின் பல பகுதிகளில் இன்றும் எரிபொருள் நிரப்பு நிலை யங்களில் நீண்ட வரிசை காணப்பட் டது.

நேற்று நள்ளிரவு முதல் எரி பொருள் கொள்வனவு கட்டளை செய் யும் நடவடிக்கைகளிலிருந்து விலகு வதாக எரிபொருள் விநியோகத் தர்கள் சங்கம் அறிவித்ததைத் தொடர்ந்து எரிபொருளுக்கான வரிசை ஏற்பட் டுள்ளது.

எரிபொருள் விநியோகத்தர்க ளுக்கு வழங்கப்பட்ட 3 சதவீத தள்ளு படியை இரத்துச் செய்ய கனியவள கூட்டுத்தாபனம் தீர்மானித்திருந்தது.

இந்தத் தீர்மானத்துக்கு எதிர்ப் புத் தெரிவித்து, எரிபொருள் விநியோ கத்தர்கள் சங்கம் நேற்று நள்ளிரவு முதல் எரிபொருள் கொள்வனவு கட் டளை செய்யும் நடவடிக்கைகளிலிருந்து விலகுவதாகத் தெரிவித்தது.

இதனைத் தொடர்ந்து இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்பது குறிப் பிடத்தக்கது.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**நோயாளர்களின்...**

யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்துக்கு எதிராக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கடந்த வியாழக்கிழமை முதல் பணிப்புறக்கணிப்பு தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்திருந்தது.

இதனால் வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்கு வந்த நோயாளர்கள் பலரும் சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொண்டு வீடுகளுக்குத் திரும்பிச் சென்றிருந்தனர்.

இந்நிலையில், வைத்தியசாலை நிர்வாகத்தினருக்கும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற பேச்சுகளின் போது ஓரளவு இணக்கம் காணப்பட்டது.

இதையடுத்து நோயாளர்களின் நலன் கருதி தமது பணிப்புறக் கணிப்புப் போராட்டத்தை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மேற்கொள்ளப் போவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிக்கை ஊடாக அறிவித்திருந்தது.

இதற்கமைய யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவ சேவைகள் அனைத்தும் இன்று முதல் வழமைக்குத் திரும்பியுள்ளன.

இதனால் கடந்த இரண்டு நாட்களாகப் பெரும் அவதியை எதிர்நோக்கியிருந்த நோயாளர்கள் பலரும் இன்று தமக்கான சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்டமையால் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

எனினும், எதிர்காலத்தில் நோயாளர்களைப் பாதிக்காத வகையில் வைத்தியசாலையின் அனைத்து தரப்பினர்களும் செயற்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





**தமிழ் அரசியல்...**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் எழுப்பிய கேள்விக்கு, ஒரு வாரத்துக்குள் பதிலளிக்கப்படும் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடியது.

இதன்போது நிலையியல் கட்டளையின் 27ஃ2 இன் கீழ் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் எம்.பி. விசேட அறிக்கையொன்றை விடுத்து கேள்விகளை எழுப்பி இருந்தார்.

"தமிழ் இளைஞர்கள் பலர் இலங்கை சிறைச்சாலைகளில் நீண்டகாலமாக அரசியல் கைதிகளாக தடுத்துவைக்கப் பட்டுள்ளனர். இவர்களின் குடும்பங்கள் கண்ணீருடனும், கவலையுடனும் அவர்களின் வரவுக்காக காத்திருக்கின்றன." – என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது எத்தனை தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் உள்ளனர்?

எந்தெந்தச் சிறைச்சாலைகளில் தடுத்து வைத்துள்ளனர்?

அவர்கள் எப்போது விடுதலை செய்யப் படுவார்கள்?

மனிதாபிமான அடிப்படையில் அல்லது ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய முடியுமா?"

– என்று சிறீதரன் எம்.பி. கேள்விகளை எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார,

"இது மிக முக்கிய பிரச்சினையாகும். எனவே, இன்றைய தினத்திலேயே பதிலளிக்க முயற்சித்தேன். எனினும், பாதீட்டில் நீதி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் நாளை நடைபெறவுள்ளதால் அமைச்சு அதிகாரிகள் அனைவரும் வேலைப்பளுவில் உள்ளனர். எனக்கு ஒரு வாரம் தாருங்கள். முழுமையான பதில்களை நிச்சயம் வழங்குவேன்." – என்று குறிப்பிட்டார்.

**மீண்டும்...**

"நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாக தங்கள் மூவருடனும் கலந்துரையாடத் தீர்மானித்திருந்தோம்.

இந்தக் கலந்துரையாடல், ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகத் தங்களது கட்சிகளும் எமது கட்சியும் இணைந்து ஒன்றாகப் போட்டியிட்டது போல் இந்தத் தேர்தலிலும் சில இடங்களிலாவது ஒன்றாகப் போட்டியிடுவது பற்றி ஆராய்வதற்கே ஆனது.

இது சம்பந்தமாகக் கலந்துரையாட 02/3/2025 ஆம் திகதியை செல்வம் அடைக்கலநாதனுடன் நிர்ணயித்திருந்தோம்.

எனினும், அந்த முயற்சி இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போது தாங்கள் எமது கட்சியைத் தவிர்த்து வேறு ஒரு கூட்டணியை 23/2/2025 ஆம் திகதி உருவாக்கியமை ஏமாற்றம் அளிப்பதாகவும் கவலை அளிப்பதாகவும் அமைந்தது. இது எமக்குத் தனித்துப் போட்டியிடும் சூழலை உருவாக்கியமை இயல்பானதும் தவிர்க்க முடியாததமாகும்.

நாம் இந்த முயற்சியை மேற்கொண்டது தனிய தேர்தலுக்காக அல்ல. எமது முயற்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய இந்த நான்கு கட்சிகளும் தமிழினத்தின் நலன் கருதி மீண்டும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்ற நோக்கத்துடனே ஆகும் என்பதை மீண்டும் பதிவு செய்கின்றேன்.

இந்த முயற்சியை மேலும் தொடரவே விரும்புகின்றேன். இதற்கான தங்களது இணக்கம் இருக்குமானால் நாம் தொடர்ந்து பேசலாம்.

அதேநேரம் நாம் தனித்துப் போட்டியிட்டாலும் தேர்தலுக்குப் பின் இணைந்து வடக்கு – கிழக்கில் உள்ள சகல தமிழ் உள்ளூராட்சி மன்ற நிர்வாகங்களையும் நாம் கைப்பற்றும் முகமாக தேர்தலுக்குப் பின் செயற்படுவதற்கான உடன்பாடு ஒன்றை தேர்தலுக்கு முன்னரே ஏற்பாடு செய்தல் வேண்டும். இதற்கும் தங்களது உடன்பாடு இருக்கும் என்றால் நாம் தொடர்ந்து பேசலாம்.

தங்களது துரித பதிலுக்கு நன்றி உடையவராவோம்." – என்றுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நன்றி கெட்ட அமெரிக்கா!

உலகம் மிகக் கவனமாக எதிர்பார்த்துக் காத்திருந்த அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி சந்திப்பு முரண்பாட்டு நிலையில் அதிருப்தியுடன் முடிவடைந் திருக்கின்றது.

சுயாதீனமான விமர்சகர்கள் குறிப்பிடுகின்றமைபோல அமெரிக்காவின் கடந்த எட்டு தசாப்த கால சர்வதேச அரசியல் கையாள்கையில் இத்தகைய முதுகில் குத்திய துரோகத்தனம் - தன்னோடு அணி சேர்ந்து நின்ற ஒரு நாட்டை மோசமாக நட்டாற்றில் கைவிட்ட மோசமான கீழ்மைத்தனம் - இதுவே முதல் தடவையாகும்.

நீண்ட காலமாக புரையோடிப் போயிருந்த அமெரிக்காவின் சர்வதேச திமிர்த்தனத்தின் - சண்ட பிரசண்டத்தின் - மற்றொரு வடிவத்தை இப்போது காண்கின்றோம்.

இலங்கைக்கு தாராளமாக கடனுதவிகளை வழங்கி, இலங்கையை சர்வதேச கடன் பொறிக்குள் மாட்ட வைத்தது சீனா என்ற ஒரு குற்றச்சாட்டு உண்டு.

அதுபோலவே, சும்மா இருந்த உக்ரைனைத் தூண்டித் தன் பக்கம் - தன் தலைமையிலான நேட்டோ நாடுகள் பக்கம் - சேரச் செய்யத் தூண்டி இழுத்து, அதன் மூலம் அந்த நாட்டை ரஷ்யாவோடும் முரண்பட வைத்து, நடுவீதிக்கு கொண்டு வந்த அமெரிக்கா, இப்போது தன்னுடைய உள்நாட்டு அரசியல் முரண்பாடுகள் காரணமாக உக்ரைனின் இறைமையை நட்டநடு வீதியில் போட்டடிக்கும் கைங்கரியத்தை முன்னெடுக்கின்றது.

உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்கி, அதைப் போருக்குத் தூண்டி, பெரும் யுத்தத்துக்குள் நெட்டித் தள்ளிவிட்டு, அந்தப் போர் பொறிக்குள் அந்த நாட்டை மாட்ட வைத்துவிட்டு, இப்போது அதை அம்போ எனக் கைவிட்டு அடாவடித்தனம் பண்ணுகின்றது அமெரிக்கா.

அமெரிக்காவை நம்பி அதனுடன் இராணுவ ஒப்பந்தங்களைச் செய்து, அதில் தங்கியிருக்கும் ஐரோப்பிய நாடுகள் இப்போது தங்களின் மிக ஆபத்தான நிலைமையை உணர்ந்து கொள்ளும் சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

பக்கத்தில் இருக்கும் கனடாவிலிருந்து, தன்னோடு இதுவரை காலமும் அணி வகுத்து நின்ற ஐரோப்பிய நாடுகள் வரைத் தன்னுடைய திமிர்த்தனத்தை வெளிப்படுத்தத் தொடங்கி இருக்கின்றது அமெரிக்கா.

இது டிரம்ப் நிர்வாகத்தின் சர்வதேச அரசியல் கையாளுகையின் குளறுபடித்தனம் மட்டுமல்ல அதையும் தாண்டி அமெரிக்க மக்களின் தூர திருஷ்டியற்ற - தில்லுமுல்லுத்தனமான - பொறுப்பற்ற - வாக்களிப்பின் பெறுபேறாக ஏற்பட்ட உலகக் குழப்பமும் கூட.

அமெரிக்கா போன்ற இராணுவ வல்லாதிக்க நாட்டின் தலைமையைத் தெரிவு செய்வதில் அந்த மக்கள் சின்னத்தனமாக நடந்து கொண்டதின் விளைவை முழு உலகமுமே அனுபவிக்கப் போகின்றது என்பதற்கான ஏது நிலைகள் தென்படுகின்றன.

அமெரிக்க அதிபரின் இந்த தலைக்கனப் போக்கை வெறுமனே தனி மனிதரான ட்ரம்பின் நடவடிக்கையாகக் கணிக்க முடியாது. அமெரிக்கா போன்ற ஒரு வல்லாதிக்க நாட்டில் தலைமையை அந்த நாட்டு மக்கள் எவ்வளவு பொறுப்புணர்வோடு தெரியக்கூடியவர்கள் என்ற சித்துவம் இப்போது அம்பலமாகி இருக்கின்றது. இதை வைத்துக்கொண்டு எதிர்காலத்தில் எப்படி சர்வதேச உறவுகளில் அமெரிக்காவை கையாள்வது என்பது குறித்து உலக நாடுகள் தீர்மானம் எடுக்க வேண்டிய ஒரு தீர்க்கமான கட்டம் வந்திருக்கின்றது.

தம்முடைய உள்நாட்டு அரசியல் கொள்கைக் கோட்பாடு, உள் முரண்பாடு காரணமாக இதுவரை காலமும் தன்னோடு நின்று, பல்லாயிரம் உயிர்களைப் பலி கொடுத்து, பெரும் இழப்பைச் சந்தித்த உக்கிரனை நட்டாற்றில் விட்ட நன்றி கெட்ட அமெரிக்கா குறித்து, உலக நாடுகள் தீர்க்கமாகச் சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய காலகட்டம் இது.




# த பினான்ஸ் நிதி நிறுவனத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நீதி வேண்டும்

## ஜனாதிபதி விசாரணைக் குழுவை நியமிக்குமாறு கோரிக்கை

**(எஸ்.நிதர்ஷன்)**

த பினான்ஸ் நிதி நிறுவனத்தால் பாதிக்கப்பட்ட பலரும் யாழ். மாவட்டத்தில் இருக்கும் நிலையில் யாருடைய பக்கத்தில் தவறிழைக்கப்பட்டுள்ளது என்பதை கண்டறிய ஜனாதிபதி தலையிட்டு விசாரணைக் குழுவை நியமித்து எமக்கு நீதியை பெற்றுத் தர வேண்டும் என பாதிக்கப்பட்ட வைப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் த பினான்ஸ் நிறுவனத்தில் வைப்பிட்ட பாதிக்கப்பட்ட வைப்பாளர்கள் இதனை தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் 130 இற்கும் மேற்பட்ட வைப்பாளர்கள் த பினான்ஸ் நிறுவனத்தில் வைப்பிலிட்டிருக்கின்றோம். நாடளாவியரீதியில் 6400 இற்கும் மேற்பட்ட வைப்பாளர்கள் பணத்தை இழந்திருக்கிறார்கள். 11,500 பில்லியனுக்கு மேற்பட்ட பணத்தை இழந்திருக்கிறோம். இந்த நிறுவனம் 2009 ஆம் ஆண்டு மத்திய வங்கியின் அனுமதி மற்றும் அமைச்சரவை அனுமதியோடு மீண்டும் செயற்படுவதற்கு அனுமதிக்கப்பட்டது.

இந்த நிதி நிறுவனம் பூட்டப்படுவதற்கு பன்னிரண்டு நாள்களுக்கு முன்னதாகவும் பெருந்தொகையான வைப்பு பணத்தை இந்த நிதி நிறுவனம் தற்போது வெறுமையாக்கல் செயல் திட்டத்தின் கீழ் மத்திய வங்கியின் அனுமதி பெற்றிருப்பதாக அறிகின்றோம். நிறுவனத்தின் சொத்துக்கள் கூட குறைந்த விலைக்கு விற்கப்படுவதாக எமக்குத் தகவல்கள் கிடைக்கின்றன.

ஆறு வருடங்களாகியும் கூட வட்டி பணம் கூட இல்லாமல் நாம் இருக்கிறோம். ஆகவே வட்டியுடன் சேர்த்து குறித்த வைப்பு பணத்தை மீட்டு தருமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுகின்றோம்.

இதில் யாருடைய பக்கத்தில் தவறு இருக்கின்றது என்பதை அறிவதற்காக விசாரணை குழுவை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நியமித்து எமக்கான நீதியை பெற்று தர வேண்டும்.

நாங்கள் மத்திய வங்கியினுடைய அனுமதி பெற்று, அவர்களின் பூரண கட்டுப்பாட்டில் இயங்கும் நிதி நிறுவனம் என்ற நம்பிக்கையிலேயே நாங்கள் இந்த வைப்புக்களை செய்திருந்தோம். அவ்வாறே அவர்கள் தமது இணையதளத்திலும் விளம்பரப்படுத்தி இருந்தார்கள்.

தமது நிதி நிறுவனத்தின் 36 வீதமான பங்குகளை அரச வங்கிகள் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி கிளீன் ஸ்ரீ லங்கா எனும் திட்டத்தின் கீழ் லஞ்சம் ஊழலற்ற ஒரு தூய்மையான அரசைப் பேணுவதாக உறுதியளித்தார்.

எமது நாடு வளர்ச்சி அடைய வேண்டிய நிலையில் எமக்கான நீதி ஏனைய முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும். இதில் எங்கே தவறிழைக்கப்பட்டிருக்கின்றது. நிதி நிறுவனத்தில் தவறிழைக்கப்பட்டுள்ளதா? என்பதை நிறைவேற்றதிகாரம் உள்ள ஜனாதிபதி தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொது மக்களின் ஆதரவை பெற்ற ஜனாதிபதியும் அரசும் நிச்சயமாக நீதியைத் தர வேண்டும். - என்றனர்.





# தேசிய சமூக விஞ்ஞானப் போட்டியில் காரைதீவு மாணவனுக்கு இரு பதக்கங்கள்

( வி.ரி.சகாதேவராஜா)

கல்வி அமைச்சு நடத்திய தேசிய மட்ட 2024 ஆம் ஆண்டுக்கான சமூக விஞ்ஞானப் போட்டிகளில் காரைதீவு மாணவன் சத்தியநாதன் குகேஸ் இரு பதக்கங்களைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி மாணவனுக்கே இந்தப் பதக்கங்கள் கிடைத்துள்ளன.

சத்தியநாதன் குகேஸ் அகில இலங்கை ரீதியில் 2 ஆம் இடம் பெற்று வெள்ளிப் பதக்கத்யையும் தேசிய மட்டத்தில் 3 ஆம் இடம் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டதன் மூலம் இந்தச் சாதனை நிலைநாட்டப்பட்டுள்ளது.

இந்த மாணவன் காரைதீவு விபுலானந்தா வீதியில் வதியும், ஆலையடிவேம்பு பிரதேச சபையின் நிதி உதவியாளர் சத்தியநாதன் – ரதி தம்பதியினரின் ஏக புதல்வர் ஆவார்.

வெற்றி பெற்ற மாணவர்களைப் பாராட்டி சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் எம் எஸ்.சஹ‌ுதுல் நஜீம் தலைமையில் நடைபெற்றது.








# அருகிவரும் பாரம்பரிய போஷாக்கு உணவு கண்காட்சி நிகழ்வுகள் வாழைச்சேனையில்!

(பழுவூரான்)

அருகிவரும் பாரம்பரிய போஷாக்கு உணவுக்கண்காட்சிவாழைச்சேனையில் கோறளைப்பற்றுப் பிரதேச செயலாளர் திருமதி ஜெயானந்தி திருச்செல்வம் தலைமையில் கண்ணகிபுரம் லயன்ஸ் கிளப் மண்டபத்தில் நேற்று வெள்ளிக் கிழமை (28) இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக மட்டக் களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டார்.

கோறளைப்பற்று பிரதேச செயலகம், வேள்ட் விசன் மற்றும் வாழைச் சேனை சுகாதார வைத்திய அதிகாரி



அலுவலகம் ஆகியன இணைந்து “ஆரோக்கியமான உணவு எமது உரிமை” எனும் தொனிப் பொருளில் இந்த உணவுக் காட்சியை ஏற்பாடு செய்திருந்தன.

எமது பாரம்பரிய சிறுதானிய உணவு வகைகளை மீண்டும் பயன்படுத்தி ஆரோக்கியமான நோயற்ற வாழ்வை வாழ்வதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்தக் கண்காட்சி நடைபெற்றது.

இதன்போது கோறளைப்பற்று மக்களால் இந்தப் பிரதேசத்தில் குறைபாடாக காணப்படும் சுகாதார பரிசோதகர், பொது சுகாதார தாதியர் உத்தியோகத்தர் மற்றும் பொதுச் சுகாதார மருத்துவ மாது ஆகிய வெற்றிடங்களுக்கு உரிய உத்தியோகத்தர்களை நியமித்து தருமாறும் அரச அதிபரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி திருமதி பாமினி அச்சுதன், வேள்ட் விஷன் நிறுவன உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.





# மீள் எழுச்சி பெற்று வருகிறது முகத்துவாரம் பாலர் பாடசாலை

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி முகத்துவாரம் பாலர் பாடசாலை கடந்த 17 வருடங்களாக மூடப்படிருந்து. முன்னைய பாலர் பாடசாலைக் கட்டடம் மற்றும் இதர விளையாட்டு உபகரணங்கள் அனைத்தும் பயன்படுத்த முடியாத வண்ணம் மிகவும் மோசமாக சேதமடைந்திருந்தன.

இந்த நிலையில் கற்பிட்டி முகத்துவாரம் சிறார்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கோடு அண்மையில் தற்காலிகமாக இணைப்பு செய்யப்பட்ட கிராம உத்தியோகத்தர் எம்.பீ.எம் அர்ஷதின் தொடர் முயற்சியில் கற்பிட்டி உதவி பிரதேச செயலாளர் பி.ஜி.எஸ். என். பிரியதர்ஷினியின் ஆதரவுடன் மஹ்தி பவுண்டேஷன் நிறைவேற்று பணிப்பாளர் ஏ.ஆர்.எம் முஸம்மிலின் அனுசரணையுடம் ரிஸ்னி மோட்டர்ஸ உரிமையாளர் சகோதரர் ரஸீம் உதவியுடன் முகத்துவாரம் பாலர் பாடசாலை 17 வருடங்களின் பின் மீள் எழுச்சி பெறவுள்ளது.

அதன் அடிப்படையில் கற்பிட்டி முகத்துவாரம் பாலர் பாடசாலை மாணவர்களுக்கு மஹ்தி பவுண்டேஷன் அனுசரணையில் சீருடை, புத்தக பை, மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை (27) கிராம உத்தியோகத்தர் எம்.பீ.எம் அர்ஷத் தலைமையில் இடம்பெற்றது.

இந்தநிகழ்வில்மஹ்திபவுண்டேஷன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏ. ஆர். எம். முஸம்மில், கற்பிட்டி தில்லையூர் மீனவ சங்கத் தலைவரும் மஹ்தி பவுண்டேஷன் உறுப்பினரும் சமூக செயற்பாட்டாளருமான எம்.பீ.எம். சபுறுல்லாஹ்கான், முகத்துவாரம் சமூர்த்தி சங்கத்தின் தலைவர் யூ.ஜகத் வசந்த குமார், முகத்துவாரம் பாலர் பாடசாலையின் ஆசிரியை எம்.ஆர்.எப். நுஸ்ரா மற்றும் சமூக ஆர்வலர்களான எம்.ஐ.எம். ரபீக், ஜே.எம். நளீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

17 வருடங்களின் பின்னர் முஹத்துவாரத்தில் பாலர் பாடசாலையை உயிர் பெற வைத்துள்ள கிராம உத்தியோகத்தர் எம்.பீ.எம் அர்ஷதுக்கு முஹத்துவார பெற்றோர்கள் தமது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துள்ளனர்.






## இலங்கைக் கடலில் அத்துமீறித் தொழில் செய்தபோது

# கைதான மீனவர்களை விடுவிக்கக்கோரி தங்கச்சி மடத்தில் காத்திருப்புப் போராட்டம்

### அரச அதிகாரிகள் பேச்சு நடத்தியும் போராட்டத்தை கைவிட மறுத்த மீனவர்கள்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கைது செய்யப்பட்டு இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தி நேற்று (28) காலை தொடங்கிய உண்ணாவிரத போராட்டம் தொடர்ந்து நேற்று (28) இரவிலிருந்து காத்திருப்பு போராட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரச அதிகாரிகள் போராட்டத்தை கைவிடுமாறு மீனவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்திய போதிலும் மீன வர்கள் அதை ஏற்க மறுத்துத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக தமிழக மீனவர்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டும் மற்றும் நீதிமன்ற காவலிலும் நூற்றுக்கும் மேற்பட்ட மீன வர்கள் இலங்கை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அதே போல் நூற்றுக்கும் மேற்பட்ட படகுகளும் இலங்கை வசம் உள்ளன.

இலங்கைச் சிறையில் உள்ள மீனவர்களையும் படகுகளையும் உடன டியாக விடுவிக்க வேண்டும் என்று தங்கச்சிமடத்தில் ராமேஸ்வரத்தைச் சேர்ந்த அனைத்து விசைப்படகு மீனவர்கள், நாட்டுப்படகு மீனவர்கள் சிறையுள்ள மீனவர்களின் குடும்பத் தினர், முக்கிய கட்சி பிரமுகர்கள் மற்றும் அமைப்புகளை சேர்ந்தவர்கள் காலை முதல் இரவு வரை தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் மாலை உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்ட மீனவர்கள் அதே உண்ணாவிரத பந்தலில் நேற்று (28) இரவில் இருந்து தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மத்திய அமைச்சர் அல்லது மத் திய அரசு அதிகாரிகள் மீனவர் பிரச்சி னையில் நிரந்தர தீர்வு பெற்றுத் தருவதாக உறுதி அளிக்கும்வரை இந்தக் காத்திருப்பு போராட்டம் இரவு, பகலாகத் தொடரும் என மீனவர்கள் தரப்பில் தெரிவித்தனர்.

இந்த நிலையில் இந்த போராட் டத்தைக் கைவிடுமாறு ராமேஸ்வரம் உட்கோட்ட துணை காவல் கண்காணிப் பாளர் சாந்தமூர்த்தி, ராமேஸ்வரம் வட்ட ஆட்சியர் ஜாபர் உள்ளிட்டோர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்ட







மீனவர்களிடம் பேச்சு நடத்தி மாவட்ட ஆட்சியரை சந்திக்க வருமாறு அழைத் தனர். ஆனால் மீனவர்கள் அதனை ஏற்க மறுத்து தொடர்ந்து காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் கனமழை பெய் யும் என இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்த நிலையில் தங்கச்சிமடத்தில் அவ்வப்போது கன மழை பெய்து வருகிறது.

இருப்பினும் அந்த மழையையும் பொருட்படுத்தாமல் காத்திருப்பு பந்தலில் தொடர்ந்து மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த காத்திருப்பு போராட்டத்தை அடுத்து தங்கச்சிமடம் முழுவதும் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடு படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் இன்று (01) மீனவர்களது இந்தக் காத்திருப்பு போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக அ.தி. மு.க., எஸ்.டி.பி., மனிதநேய மக்கள் கட்சி, மே 17 இயக்கம் உள்ளிட்ட கட்சிக ளைச் சேர்ந்தவர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.





# புனரமைக்கப்பட்ட கணினி ஆய்வு கூடம் கையளிப்பு!

**(அபு அலா, எஸ்.எம்.முபீன்)**

இமாம் கஸ்ஸாலி மகா வித்தியாலயத்திற்கு சுமார் 6 லட்சம் ரூபா பெருமதியான கணினித் தொகுதியும் புனரமைக்கப்பட்ட கணினி ஆய்வு கூடமும் நேற்று (28) உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

'ரேஸ்ட் அக்டமி' ஊடாக இந்த செயற்றிட்டம் முன் னெடுக்கப்பட்டு அதன் இணைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை பணிப்பாளர் சபை உறுப்பினருமான சுலைமான் நாஸிறுனால் உத்தியோக பூர்வமாக பாடசாலையின் அதிபர் எஸ்.எம்எம்.ஜாபீரிம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாகக் கல்முனை வலயக் கல்விப் பணிமனையின் திட்டமிடல் பிரிவுக்கு பொறுப்பான பிரதி கல்விப் பணிப்பாளர் திருமதி அஸ்மா மலிக் கலந்து கொண்டார். கௌரவ அதிதிகளாக நிந்தவூர் கோட்டக்கல்வி அதிகாரி எம்.எல்.எம்.முதரிஸ் மற்றும் ஆசிரிய ஆலோசகர் ஏ.அன்சார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

கையளிக்கப்பட்ட கணினிகள் மூலமாக மாலை வேளைகளில் மற்றும் விடுமுறை நாள்களில் முதற்கட்டமாக இந்தப் பாடசாலை மாணவர்களுக்கு இலவச ஆங்கில மற்றும் கணினிப் பயிற்சிநெறிகள் நடைபெறவுள்ளது.

இதற்கான முறையான அனுமதியைக் கல்முனை வலயக் கல்வி அலுவலகம் மற்றும் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு வழங்கியுள்ளன.

# வெளிநாட்டவருக்குத் தனிப் பாடசாலை பொத்துவில் பகுதியில் இயங்குகிறது!

## அரசு கவனம் செலுத்த வேண்டும் என்கிறார் இம்ரான் எம்.பி.

**(எச். எம். ஹலால்தீன் (அபு அலா, எஸ்.எம்.முபீன்))**

பொத்துவில் பிரதேசத்தில் வெளிநாட்டவர்கள் பாடசாலை ஒன்று நடத்தப்பட்டு வருகிறது என்றும், இந்தப் பாடசாலை கிழக்கு மாகாண சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகின்றது. இந்த விடயம் குறித்து அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொத்துவில் பிரதேசத்தில் ஏ.பி.சீ. அருகம்பை கல்லூரி என்ற பெயரில் பாடசாலை ஒன்று இயங்குகிறது. அது கடந்த ஆட்சிக் காலத்தில் கிழக்கு மாகாண சபையின் பாலர் பாடசாலை கல்விப் பணியகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. இந்தப் பாடசாலையைக் காரணம் காட்டி விசா பெற்று சில வெளிநாட்டவர்கள் தொடர்ச்சியாக இங்கு தங்கி வருகின்றனர்.

இதில் ஏதும் முறைகேடுகள் அல்லது பின்புலங்கள் உள்ளனவா என்ற சந்தேகம் நிலவுகிறது. பொத்துவில் பிரதேச மக்கள் சிலர் எனது கவனத்துக்கு இதைக் கொண்டு வந்துள்ளனர்.



கல்லூரி என்ற பெயரில் பாலர் பாடசாலை கல்விப் பணியகத்தில் பதிவு செய்ய முடியுமா? வெளிநாட்டவரின் பெயரில் இந்தப் பாடசாலை என்ன அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளது? அதற்கான ஏற்பாடுகள் பாலர் பாடசாலை நியதிச் சட்டத்தில் உள்ளனவா? என்ற சந்தேகங்களுக்கு நாட்டின் தேசிய நலன் கருதி தெளிவு காண வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது.

பாலர் பாடசாலைப் பணியகத்தில் பதிவு செய்து ஆரம்ப, இடைநிலைக் கல்வி நடவடிக்கைகளும் இங்கு முன்னெடுக்கப்படுகின்றனவா அல்லது வேறு ஏதும் அரச அங்கீகாரம் இந்தக் கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளதா? என்பன குறித்து அவதானத்தை செலுத்த வேண்டியுள்ளது.

வெளிநாட்டவரின் பிள்ளைகள்தான் இங்கு கல்வி கற்பதாகக் கூறப்படுகின்றது. அப்படியாயின் பொத்துவில் பகுதியில் எத்தனை வெளிநாட்டுக் குடும்பங்கள் நிரந்தரமாகத் தங்கியுள்ளன. அவர்கள் எந்த நாட்டுப் பிரஜைகள். என்ன அடிப்படையில் அவர்கள் தங்கியுள்ளனர். எத்தனை வெளிநாட்டவரின் பிள்ளைகள் இங்கு கல்வி கற்கிறார்கள் என்பன குறித்தும் ஆராய்ந்து அரசு தெளிவு படுத்த வேண்டும்.

அரசில் பதிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகள்என்றால்அவைகிரமமாக மேற்பார்வை செய்யப்பட வேண்டும். இந்தப் பாடசாலை மேற்பார்வை செய்யப்படுகின்றதா? இதனை மேற்பார்வை செய்வோர் யார்? அவர்களின் தகைமை என்ன? என்பன குறித்தும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

சில அதிகாரிகளால் இந்தப் பாலர் பாடசாலை முறைகேடாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாவும், இதற்காக வருடாந்தம் சிலருக்கு விசா நீடிப்புக்கு சிபார்சு செய்யப்படுகிறது என்றும் இதன் அடிப்படையில் சில வெளிநாட்டவர்கள் தொடர்ச்சியாக இங்கு தங்கி வருகின்றனர் எனவம் கூறப்படுகிறது. இதில் முறைகேடு அல்லது ஊழல் ஏதும் உள்ளனவா என்பது குறித்தும் விசாரித்துத் தெளிவு காண வேண்டியுள்ளது.- என்றுள்ளது.

### காரசாரமான வார்த்தைப் போர்:

# முறுகலில் முடிவடைந்தது ட்ரம்ப் - ஜெலென்ஸ்கி பேச்சு!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா.

(உக்ரைன் ஜெலன்ஸ்கியின் அரசு பல லட்சம் உயிர்களோடு விளையாடுவதோடு, மூன்றாம் உலகப் போரை மூள முனைகிறீர்கள். ரஷ்யாவுடன் போரில் உக்ரைன் வெல்ல முடியாது என ட்ரம்ப் காட்டமான எச்சரிக்கை.)

உக்ரைனில் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வது தொடர்பான உடன்படிக்கையில் கைச்சாத்திட வருமாறு உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி, அமெரிக்காவின் வெள்ளை மாளிகைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும், உப ஜனாதிபாதி வான்சும் இவரை ஓவல் அலுவலகத்தில் பத்திரிகையாளர்கள் முன்னிலையில் அவமானப்படுத்தியது சர்வதேச அரங்கில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### காரசாரமான வார்த்தைப் போர்

“உக்ரைன் ஜனாதிபதியான நீங்கள் லட்சக் கணக்கான உயிர்களோடு விளையாடுகிறீர்கள். மூன்றாம் உலகப் போரோடு விளையாடுகிறீர்கள். ரஷ்யாவுடன் போரில் நீங்கள் வெல்லவில்லை, வெல்லவும் முடியாது.

நீங்கள் இந்த அமெரிக்க நாட்டை அவமதிக்கிறீர்கள். 350 பில்லியன் டொலர்களை அமெரிக்கா உங்களுக்காக செலவு செய்தது. உங்கள் வீரர்கள் அமெரிக்க போர் கருவிகளை வைத்தே சண்டையிட்டார்கள். அது மட்டும் இல்லை என்றால் போர் ஒரு வாரத்தில் முடிந்திருக்கும்” என்று காரசாரமாகப் பேசினார்.

இந்த நிலையில், அங்கு உக்ரைன் ஜனாதிபதிக்கும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கும் இடையே பெரும் வாக்குவாதம் ஏற்பட்டது. ஒரு கட்டத்தில் ஆக்ரோசமுற்ற டொனால்ட் ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் இருந்து வெளியேறுமாறு உக்ரைன் ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டார்.

பின்னர் ட்ரம்புக்கும் உக்ரைன் ஜனாதிபதிக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி முறுகலில் முடிந்தது. இதனை தொடர்ந்து உக்ரைன் ஜனாதிபதிஅங்கிருந்து இடைநடுவில் வெளியேறிச் சென்றார்.

### ரஷ்யாவுடனான போரை தவிர்த்திருக்கலாம்

உக்ரைனின் தற்போதைய ஜனாதிபதி ஜெலன்ஸ்கி ரஷ்யாவுடனான போரை மிக இலகுவாகத் தவிர்த்திருக்க முடியும் என்றும் ட்ரம்ப் மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்கு நாடுகளுடனான சார்பு நிலை, உக்ரைனில் வாழும் ரஷ்யர்களுக்கு எதிரான அடக்குமுறைகள், இவரைப் பகடைக்காயாக்கி அந்தப் பகுதியில் தம் ஆதிக்கத்தைப் பலப்படுத்தும் நேட்டோவின் அணுகுமுறை போன்றவைதாம் ரஷ்யாவின் போருக்கான உண்மையான அடிப்படைக் காரணங்கள் ஆகும்.

அதேசமயம் ரஷ்யாவிடம் இழந்த பகுதிகளை மீண்டும் கைப்பற்றிப் பெற உக்ரைன் அரசால் முடியாது. ரஷ்யர்கள் அதிகமாக வாழும் அந்தப் பகுதிகளில் உக்ரைன் அடக்குமுறையே அவற்றை இன்று ரஷ்யாவிடம் அந்தப் பகுதிகளை இழந்ததற்கு முக்கிய என்பதும் முக்கியமான காரணம் ஆகும்.

### நேட்டோவின் பகடைக்காயாக உக்ரைன்!

இந்த நிலையில் உக்ரைன் ஜெலன்ஸ்கி அரசு மேற்கு நாடுகளுடன் ரஷ்யாவுடன் சமாதான ஒப்பந்தம் செய்வதற்குப் பதில் நேரடியாகவே பேசி ஒரு முடிவுக்கு வரலாம். ஆனால் அதனையும் அவர் செய்ய முடியாமல் இருப்பதற்குக் காரணம் அவரது நடவடிக்கைகளே. நேட்டோவின் பகடைக்காயாக மாற்றப்பட்டுள்ளதுதான் என்பதும் வெளிப்படையான காரணமாகும்.





சமாதானப் பேச்சு முறிவடைந்ததை தொடர்ந்து உக்ரைன் ஜெலென்ஸ்கி பற்றி ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த டொனால்ட் ட்ரம்ப், “அவர் சமாதானத்தை விரும்பும் ஒரு மனிதராக நடந்து கொள்ளவில்லை, முறையாக உடுக்கத் தெரியவில்லை, பேசத் தெரியவில்லை. அமெரிக்காவையும், அமெரிக்காவின் அந்தஸ்த்தையும் மதிக்க தவறி விட்டார். இனிமேல் அவராகத் திரும்பி வந்தாலும் நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம். உக்ரைனுக்கான அனைத்து ராணுவ உதவிகளையும் நிறுத்தி விட்டோம்” என்றார்.

### நன்றி இல்லாத உக்ரைன்?

இந்தப் பேச்சுவார்த்தையின் போது அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ், ரஷ்யாவுடன் போரில் ஈடுபடுவதற்கு உங்கள் உக்ரைன் நாட்டில் வீரர்கள் இல்லை என கூறியுள்ளார்.

அப்போது கோபமடைந்த ஜனாதிபதி ஜெலென்ஸ்கி, உக்ரைன் நாட்டில் வீரர்கள் இருக்கின்றார்களா என்பதைத் தங்கள் நாட்டுக்கு வந்து பார்க்குமாறு சீற்றத்துடன் தெரிவித்தார்.

இதன் காரணமாக கோபமடைந்த ட்ரம்ப், இருவருக்கும் வாக்குவாதம் முற்றிய நிலையில், இடையில் குறுக்கிட்டு பேசினார். ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினால் அவ்விடத்தில் மேலும் பதற்றம் அதிகரித்தது.

ஜெலென்ஸ்கியை நோக்கி கோபமாக பேசிய ட்ரம்ப், நீங்கள் எங்களுக்கு நன்றியுடன் இருக்க வேண்டும். அத்துடன் நீங்கள் ஒப்பந்தத்துக்கு ஒப்புக் கொள்ள வேண்டும் அல்லது நாங்கள் இதிலிருந்து வெளியேறி விடுவோம்.

அது மாத்திரமன்றி, உங்களிடம் ரஷ்யாவை எதிர்த்து போரிட போதுமான துருப்புக்கள் இல்லை. நீங்கள் போர் நிறுத்தத்தை விரும்புகிறீர்களா? இல்லையா? என்பதை எங்களிடம் கூற முடியாது தப்பிக்க முயல்கின்றீர்கள்.

எனக்கு அவமரியாதை மட்டுமின்றி, நீங்கள் எங்கள் அமெரிக்க நாட்டுக்கு அவமரியாதையை ஏற்படுத்துகின்றீர்கள். எனக்குத் தெரியும் உங்களால் போரில் வெற்றி பெற முடியாது என்று. எனவே, நீங்கள் நன்றியுடன் இருக்க வேண்டும். ஆனால் இது போன்று ஒப்பந்தம் உங்களுடன் செய்வது மிகவும் கடினமானது.

எங்கள் அமெரிக்க ஆயுதங்கள் இல்லை என்றால் இந்த போர் எப்போதே முடிந்து இருக்கும். நீங்கள் தனியாக செயற்பட்டதில்லை. ஆனால் நீங்கள், எங்களிடம் 350 பில்லியனைப் பெற்றுள்ளீர்கள்.

அத்துடன் எங்கள் ஆயுத தளபாடங்கள் இல்லை என்றால் இந்தப் போர் விரைவில் சில வாரங்களில் முடிந்திருக்கும் – என்று கடுமையாக எச்சரித்துள்ளார்.






# பள்ளிவாசல்கள் முஸ்லிம் சம்மேளனத்துடன் சிநேகபூர்வ சந்திப்பில் ஆதம்பாவா எம்.பி.!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அரசியலமைப்பு பேரவை உறுப்பினரும் அம்பாறை மாவட்ட கரையோர பகுதிகளுக்கான அபிவிருத்தி குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ. ஆதம்பாவா, காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் ஏற்பாடு செய்த சிநேகபூர்வ சந்திப்பில் கலந்து கொண்டார்.

சம்மேளன உப தலைவர் அல்ஹாஜ் எம்.சீ.எம்.ஏ. சத்தார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வைப் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க். எம்.எம்.எம். இல்ஹாம் பலாஹி வழி நடத்தினார்.

சம்மேளனம் தொடர்பான பொது அறிமுகம், அதனூடாக முன்னெடுக்கப்படும் பணிகள் தொடர்பாக உப தலைவர் அல்ஹாஜ் எம்.சீ.எம்.ஏ. சத்தார் விளக்கினார். இந்தச் சந்திப்பின் நோக்கம் தொடர்பாகவும் எடுத்துரைக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவாவுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது.

காத்தான்குடி பிரதேசத்தில் அடையாளப் படுத்தப்பட்ட பிரச்சினைகள் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. அதனை தீர்ப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பான விடயங்கள் நாடாளுமன்ற உறுப்பினரால் தெளிவுபடுத்தப்பட்டன.

சம்மேளன நிர்வாக சபை உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், புத்திஜீவிகள், அரச அதிகாரிகள், கல்வியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலரும் பங்குபற்றியிருந்தனர்.

புதிய அரசியலமைப்பு தொடர்பாக சம்மேளனத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர்ச்சியான செயற்பாடுகளின் அடுத்த கட்ட நகர்வாக இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# மருதமுனையில் பூப்பந்தாட்ட அரங்கு திறப்பு!

(அஸ்லம் எஸ்.மௌலானா, பாறுக் ஷிஹான்)

கடந்த அரசின் காலத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசால் காசிம், எஸ்.எம்.எம். முஷாரப் ஆகியோரின் நிதி ஒதுக்கீட்டில் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட உள்ளக பூப்பந்தாட்ட விளையாட்டரங்கு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் ஐ. உபைதுல்லா தலைமையில் இடம்பெற்ற திறப்பு விழாவில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசால் காசிம், எஸ்.எம்.எம். முஷாரப், கல்முனை மாநகர முன்னாள் மேயர் சட்டத்தரணி ஏ.எம். றகீப் ஆகியோர் அதிதிகளாகப் பங்கேற்றிருந்தனர்.

சுகாதார பிரதி அமைச்சராக பைசால் காசிம் பதவி வகித்த காலப் பகுதியில் முன்னாள் மேயர் றகீப் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக 5.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்த உள்ளக பூப்பந்தாட்ட விளையாட்டரங்கு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்று வந்தது. தொடர்ந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் மேற்கொண்ட நிதியொதுக்கீட்டின் மூலமாக பூர்த்தி செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் கல்லூரியின் பிரதி, உதவி அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது இங்கு முதலாவது பூப்பந்தாட்டம் அதிதிகளால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.







# உள்ளூராட்சி மன்றங்களை நற்பெயரோடு கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் பணியாற்றுவேன்

## கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.அஸ்மி தெரிவிப்பு

(எஸ்.எம்.அறூஸ்)

உள்ளூராட்சி மன்றங்களை மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று பிரதேச சபைக்கு உலக வங்கியால் ஒதுக்கப்பட்ட ஐந்து கோடி ரூபா நிதியில் கட்டப்பட்ட திறன்விருத்தி அபிவிருத்தி நிலையம் நேற்று (28) மாலை திறந்து வைக்கப்பட்டது.

அக்கரைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் எல்.எம்.இர்பான் தலைமையில் இடம்பெற்ற திறப்பு விழா நிகழ்வில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நிலையத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் விசேட அதிதியாக எல்.டி.எஸ்.பி. திட்டத்தின் திட்ட பொறியியலாளர் பி.அச்சுதன் கலந்து கொண்டார். கௌரவ அதிதிகளாக அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகளின் செயலாளர்கள் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் அக்கரைப்பற்று அமைப்பாளர் அபுசஹிட், செயற்பாட்டாளர் ராஸி அஹமட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இத்திட்டத்தை வெற்றிகரமாக செய்வதற்கு பங்களிப்புச் செய்த எல்.டி.எஸ்.பி திட்டப் பொறியியலாளர் பி.அச்சுதன், பிரதேச சபை செயலாளர் எல்.எம்.இர்பான் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.அஸ்மி ஆகியோர் இங்கு நினைவுச் சின்னம் வழங்கிப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

குறைந்த வருமானத்தைக் கொண்ட அக்கரைப்பற்று பிரதேச சபைக்கு இந்தப் புதிய கட்டடத்தின் மூலம் கூடுதலான வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



இங்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.அஸ்மி உரையாற்றும்போது,

இந்த மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களை நற்பெயரோடு கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றுவேன். என்மீது மிகப் பெரும் எதிர்பார்ப்பைக் கிழக்குப் பிராந்திய உள்ளூராட்சி மன்றங்கள் கொண்டுள்ளன. அவர்களுடைய தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்காக என்னாலான பணிகளையும், முயற்சிகளையும் செய்வேன்.

அத்தோடு அக்கரைப்பற்று பிரதேச சபையும் பல தேவைப்பாடுகளைக் கொண்டுள்ளது. இங்கு பொதுச்சந்தை ஒன்று இல்லை. அதனை நிவர்த்தி செய்வதற்கான பொறுப்பும் எனக்குள்ளது.

எல்.டி.எஸ்.பி. திட்டம் நவம்பருடன் முடிவடைந்துள்ளது. உலக வங்கியின் பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது, வடக்குக்கும் கிழக்குக்கும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக் கூடிய ஏதாவதொரு திட்டத்தை செயற்படுத்துமாறு கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார். இதற்காக நாட்டின் ஜனாதிபதிக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.இதன் காரணமாக கிழக்கு மாகாண ஆளுநரையும், பிரதம செயலாளரையும், சந்தித்துவிட்டு இரண்டாம் கட்ட நகர்வில் இருக்கின்றனர். அவ்வாறான பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புகின்ற திட்டத்தின் கீழ் பொருளாதார மையங்களை நாம் ஏற்படுத்தலாம். அவ்வாறான மையங்கள் ஏற்படுத்தப்படுகின்றபோது அக்கரைப்பற்று பிரதேச சபைக்காக ஒரு பொதுச் சந்தையை உருவாக்க முடியும் என்ற எண்ணம் எனக்குள் இருக்கின்றது.

உள்ளூராட்சி மன்றங்களைப்பற்றி மக்களின் பார்வை இன்று மாற்றமாக இருப்பதை அவதானிக்கின்றோம். இதனை இல்லாமல் செய்வதற்காக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும். நாம் பெற்றுக்கொள்ளும் சம்பளத்தைக் கொண்டு நமது வாழ்க்கையைக் கொண்டு நடத்தலாம். மாறாக ஊழல் செய்து பணம் உழைப்பதால் மார்க்கத்தைக்கூட ஏமாற்றுகின்றோம். உரிய நேரத்துக்கு அலுவலகத்துக்கு வந்து பணியாற்றுவதால் வினைத்திறனான நிர்வாகச் செயல்பாட்டை அடைந்து கொள்ளலாம். எதிர்வரும் வாரங்களில் ஒவ்வொரு சபைகளுக்கும் விஜயம் செய்து உங்களது செயற்பாடுகளை அவதானிக்கவுள்ளேன்.- என்றார்.

# கல்முனையன்ஸ் போரத்தின் ஸஹர் உணவு விநியோகம்!

(நூருல் ஹுதா உமர்)

கல்முனையில் உள்ள அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் நோயாளிகளுடன் தங்கியுள்ளவர்களுக்கும், கல்முனையில் தங்கியுள்ள வெளியூர் பயணிகளுக்கும் ஸஹர் உணவு இலவசமாக ஏற்பாடு செய்து தரப்படும் என கல்முனையன்ஸ் போரம் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

ஸஹர் உணவு தேவைப்படுபவர்கள் 0777849423 எனும் தொலைபேசி இலக்கத்துடன் மாலை 05 மணி தொடக்கம் 07 மணிக்குள் தொடர்புகொண்டு முன்பதிவு செய்து கொள்ளுமாறும், ஸஹர் நேரத்தில் நேரில் வந்து ஸஹர் உணவு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் நோயாளிகளுடன் தங்கியுள்ளவர்களும், பல்வேறு தேவைகளுக்காக வெளியூர்களில் இருந்து கல்முனைக்கு வருகை தருபவர்களும் ரமழான் மாதத்தில் ஸஹர் உணவை பெற்றுக்கொள்வதில் உள்ள சிக்கல் நிலையை கருத்தில் கொண்டு கல்முனையன்ஸ் போரம் தொடர்ந்து ஏழு ஆண்டுகளாக இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# ஞானச்சுடர் மலர் வெளியீட்டு நிகழ்வும் 4 லட்சத்து 10 ஆயிரம் ரூபா உதவிகளும்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், நேற்று (28) வெள்ளிக்கிழமை ஞானச்சுடர் மாசி மாத 326 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றது.

வெளியீட்டுரையை சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி சிந்துரா கலியுகவரதனும், மதிப்பீட்டுரையை இளைப்பாறிய ஆசிரியர் திருமதி புனிதவதி சண்முகலிங்கமும் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகளும் வழங்கப்பட்டன. ஞானச்சுடர் மலருக்கான வாசகர்வட்டப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வைத்து 4 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவுக்கு உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன.

தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான நிழற்பிரதி எடுக்கும் இயந்திரம் வழங்கப்பட்டது.

சங்கானை பிரதேச வைத்தியசாலையின் கோரிக்கைக்கு அமைவாக, நரம்பியல் பிரிவுக்கு உரிய பக்கவாத நோயாளிகளுக்கான சிகிச்சை இயன் மருத்துவருக்கு வேதனம் வழங்குவதற்கு 70 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

ஆறு மாதகாலத்துக்கு தொடர்ச்சியாக வேதனம் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தின் இந்துக் கற்கைகள் பீடத்தின் கோரிக்கைக்கு அமைவாக, மூன்றாவது சர்வதேச இந்து மாநாட்டுக்கான நிதியாக ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டது.

உதவித் திட்டங்களினை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் வழங்கி வைத்தார்.







# ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கிழக்கு மாகாண ஆளுநருடன் சந்திப்பு!

(முகமட் இம்றான், அபுஅலா)




கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகரவுடன் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தலைமையில், தலைவர் பிரியந்த பெர்ணான்டோ மற்றும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொருளாளர் தரங்க மற்றும் கிழக்கு மாகாண இலங்கை ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட பிரதிநிகளான மாவட்ட தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள் ஆகியோர் சந்தித்தனர்.

சமகால கல்விப் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடல் மேற்கொண்டனர்.

ஆசிரியர் இடமாற்ற சமகால பிரச்சினைகள் மற்றும் இடமாற்ற சபையின் தீர்மானம் மாற்றியமைக்கப்படல், சமப்படுத்தல் என்ற அடிப்படையில் வழங்கப்படும் இடமாற்றங்களின் சட்டவலுவற்ற தன்மை, அதிபர் இடமாற்ற மற்றும் பாடசாலை வழங்களில் உள்ள நீதிக்குப் புறம்பான செயற்பாடுகள், சமகால பிரச்சினைகள் சட்ட வலுவற்ற ஆசிரியர் ஆலோசகர் நியமனங்கள, சட்ட வலுவற்ற வளவாளர் நியமனங்கள் உடன் மறுசீரமைக்கப்பட வேண்டியதன் அவசியம், உரிய காலத்தில் அதிபர் ஆசிரியர்களின் பதவியுயர்வு வழங்கப்படாமை மற்றும் சம்பள ஏற்றங்கள் வழங்கப்படாமை, கிழக்கு மாகாணத்தின் பல வலயங்களில் கடமை நிறைவேற்று பணிப்பாளர்கள் கடமையாற்றுவதால் உரிய முறையில் விண்ணப்பம் கோரப்பட்டு வலயக்கல்விப் பணிப்பாளர் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் போன்ற விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

கிழக்கு மாகாணத்தின் வெற்றிடமாக உள்ள 4000 வரையிலான ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய புதிய நியமனங்கள் வழங்கப்பட்ட வேண்டியதன் அவசியம், கல்வியமைச்சின் சுற்று நிருபத்துக்கு முரணாகக் கிழக்கு மாகாண தமிழ் வலயங்களில் நடைமுறைப் படுத்தப்படும் தரங்கணிப்பீட்டு படிவங்கள் நீக்கப்பட வேண்டியதன் அவசியம், மூதுர், கிண்ணியா போன்ற வலயங்களில் எஸ். எல். ஈ.ஏ. எஸ். அதிகாரிகள் பற்றாக்குறையாக உள்ள நிலையில் பல வலயங்களில் அதிபர்களாக கடமையாற்றுபவர்கள் (எஸ்.எல்.ஈ ஏ. எஸ்.) உடனடியாக மூதூர், கிண்ணியா வலயங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட வேண்டியதன் அவசியம், சட்ட வலுவற்ற பிரதி அதிபர் நியமனங்கள் உடனடியாக மீளப்பெறப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் கிழக்கு மாகாணத்தின் கல்வி வளர்ச்சிக்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய வெளிப்படைத்தன்மையும் நீதியானதுமான அபிவிருத்தி செயற்பாடுகள் பற்றியும் இலங்கை ஆசிரியர் சங்கம் நினைவூட்டியது.

இந்தக் கலந்துரையாடலில் போது தரங்கணிப்பீட்டு படிவம், வலயக்கல்விப் பணிப்பாளர் வெற்றிடத்திற்கு விண்ணப்பம் கோரல், இடமாற்றப் பிரச்சினைகள், அதிபர் பிரச்சினைகள், அதிபர் ஆசிரியர்களின் பதவிய உயர்வு, வளவாளர் நியமனங்கள், எஸ்.எல். ஈ. ஏ.எஸ் அதிபர் நியமனங்கள் மீளப்பெறப்படல் போன்ற விடயங்கள் ஓர் இரு வாரங்களில் சீர் செய்யப்படும் என்றும் புதிய ஆசிரியர் நியமனங்கள் கல்வியில் கல்லூரி மூலம் 400 நியமனங்களும் ஏனையவை பட்டதாரி ஆசிரியகள் மூலமும் விரைவில் நிவர்த்தி செய்ய முடியும் எனவும் ஆளுநர் கூறினார்.



# உச்சக் கொள்ளவில் கந்தளாய் குளம்; 10 வான் கதவுகளும் இன்று திறப்பு!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்திலும் அயல் மாவட்டங்களிலும் கடந்த இரு தினங்களாக பெய்து வரும் கடும் மழையை அடுத்து கந்தளாய் குளம் அதன் உச்ச கொள்ளவை அடைந்துள்ளது. இதனை அடுத்து இன்று (01) குளத்தின் 10 வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன என்று திருகோணமலை பிராந்திய நீர்ப்பாசனத்திணைக்கள பிரதம பொறியிலாளர் கூறினார்.



## உத்தராகண்டில் கடும் பனிச்சரிவில் சிக்கிய 25 தொழிலாளர்களை மீட்கும் பணி தீவிரம்

உத்தராகண்ட் மாநிலம் சமோலி மாவட்டத்தில் உள்ள மனா கிராமத்தில் நேற்று கடுமையான பனிச்சரிவு ஏற்பட்டது. இதில், சிக்கிய 57 தொழிலாளர்களில் 32 தொழிலாளர்கள் உடனடியாக மீட்கப்பட்ட நிலையில் எஞ்சிய 25 பேரை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

பத்ரிநாத் கோயிலில் இருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மனா கிராமத்தில் நேற்று கடுமையான பனிச்சரிவு ஏற்பட்டது. எல்லை சாலைகள் அமைப்பு (பி.ஆர்.ஓ) முகாமுக்கு அருகே இந்த பனிச்சரிவு ஏற்பட்டதால் அங்கு வீதி கட்டுமானத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் பலர் அதில் சிக்கி கொண்டனர். அவர்கள் தங்கியிருந்த வீடுகளும் பனிச்சரிவால் மூடப்பட்டன. பனிச் சரிவில் சிக்கிய 57 பேரில் 32 தொழிலாளர்கள் மீட்கப்பட்ட நிலையில் 25 பேரை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மீட்கப்பட்டவர்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மாநில பேரிடர் மீட்பு குழு (எஸ்.டி.ஆர்.எப்), தேசிய பேரிடர் மீட்பு படை , மாவட்ட நிர்வாகம், இந்தோ-திபெத் எல்லை காவல் படை (ஐ.டி.பி.பி) மற்றும் பி.ஆர்.ஓ. குழு இணைந்து சம்பவம் நடந்த இடத்தில் மீட்பு பணிகளை துரிதப்படுத்தி வருகின்றனர்.

இதுகுறித்து பி.ஆர்.ஓ. செயல் பொறியாளர் சிஆர் மீனா கூறுகையில்,

“மனா கிராமத்தில் பனிச்சரிவு ஏற்பட்ட பகுதியில் கடுமையான பனிப்பொழிவு காணப்படுகிறது. இதனால், அங்கு அனுப்பி வைக்கப்பட்ட நான்கு ஆம்புலன்ஸ்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளை சென்றடைவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. மீட்பு பணிகளில் 60-65 பேர் ஈடுபட்டுள்ளனர்.” - என்றார்.

சம்பவம் அறிந்தவுடன் உரிய மீட்பு பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு சமோலி மாவட்ட நிர்வாகத்துக்கு உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி உத்தரவிட்டார். மேலும், இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், “ பனிச்சரிவில் சிக்கியுள்ள தொழிலாளர் சகோதரர்கள் அனைவரும் பாதுகாப்புடன் மீட்கப்பட பத்ரிநாதரை வேண்டிக் கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

## இந்தி திணிப்பு, தொகுதி மறுசீரமைப்பை எதிர்ப்பது அரசியலுக்காக அல்ல: கனிமொழி



“இந்தி திணிப்பு, நாடாளுமன்ற தொகுதி மறுசீரமைப்பு ஆகியவற்றை திமுக எதிர்ப்பது அரசியலுக்காக அல்ல. சுயமரியாதை, உரிமைக்குதான் தி.மு.க. குரல் கொடுக்கிறது.”

- இவ்வாறு தி.மு.க. துணை பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி. தெரிவித்தார்.

தமிழக அரசியல் களத்தில் பா.ஜ.க. இல்லை என்றும் அவர் கூறினார்.

முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் 72 ஆவது பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு, தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சி, சென்னையில் நேற்று நடந்தது. தி.மு.க. துணை பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி. கலந்துகொண்டு, உதவிகளை வழங்கினார்.

பின்னர், அவர் கருத்து தெரிவிக்கையில்,

“இந்தி திணிப்பு, நாடாளுமன்ற தொகுதி மறுசீரமைப்பு ஆகியவற்றை அரசியலுக்காக திமுக எதிர்ப்பதாக விமர்சிக்கின்றனர். அது தவறு. சுயமரியாதை, உரிமைக் குதான் குரல் கொடுக்கிறோம்.

மும்மொழி கொள்கையை ஏற்றால் மட்டுமே நிதி தருவதாக மத்திய அரசு நிர்பந்தம் செய்கிறது. இது மிரட்டலா, இல்லையா. சுயமரியாதை உள்ள தமிழனால் அந்த மிரட்டலை ஏற்றுக்கொள்ள முடியுமா. அதனால் தான் முதல்வர் எதிர்க்கிறார்.

இங்கு மேடையில் இருக்கும் நாடாளுமன்ற உறுப் பினர்கள் யாருக்கும் இந்தி தெரியாது. ஆனால், நாடா ளுமன்றத்தில் பேசுகிறோம், அங்கு உள்ளவர்களோடு பழகுகிறோம். இந்தி தெரியாததால் எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை, எந்த நஷ்டமும் இல்லை. இந்தி படித்து யாருக்கும் லாபம் கிடைக்கவில்லை. தேவைப்பட்டால் படித்துக் கொள்வார்கள்.

இதேபோல, தொகுதி மறுசீரமைப்பு நடக்காமல் ஏன் அதுபற்றி பேசுகிறீர்கள் என பா.ஜ.கவினர் கேட் கின்றனர். மக்கள்தொகை அடிப்படையில் தொகுதிகளை சீரமைத்தால் தமிழகம் மிகப்பெரிய இழப்புக்கு ஆளாகும். பிரதிநிதித்துவம் குறையும்போது, தேர்தல் காலத்தில் பிரச்சாரத்துக்குகூட பா.ஜ.கவினர் வரமாட்டார்கள். 39 எம்.பிக்கள் இருக்கும்போதே நம்மை மிரட்டி பார்க் கின்றனர். அந்த பிரதிநிதித்துவமும் குறைந்தால், நமக் கான உரிமையை எப்படி கேட்க முடியும். ” என்றார்.

# ஹெலிக்கொப்டரில் இருந்து போர்க்கப்பலை தாக்குகின்ற ஏவுகணை சோதனை வெற்றி

ஹெலிக்கொப்டரில் இருந்து எதிரிநாட்டு போர்க்கப்பலை தகர்க்கும் குறுகிய தூர ஏவுகணையை (என்.ஏ. எஸ்.எம்-எஸ்.ஆர்), டி.ஆர்.டி.ஓ. மற்றும் இந்திய கடற்படை வெற்றி கரமாக பரிசோதித்தன.

இந்திய கடற்படை பயன்பாட்டுக்கு, ஹெலிக்கொப்டர்களில் இருந்து எதிரிநாட்டு போர்க்கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தும் குறுகிய தூர ஏவுகணையை (என்.ஏ.எஸ்.எம்-எஸ். ஆர்) டி.ஆர்.டி.ஓ. தயாரித்தது. சுமார் 50 கிலோ மீற்றர் தூரத்துக்குள் உள்ள இலக்கை, இந்த ஏவுகணை மூலம் துல்லியமாக தகர்க்கமுடியும்.

இந்த ஏவுகணையில் ‘மேன்-இன்-



லூப்’ என்ற தனிச்சிறப்பான அம்சம் உள்ளது. இதன் மூலம் ஹெலிக்கொப் டரில் பறந்தபடியே, இலக்கை கணக்கிட்டு ஏவுகணை மூலம் பைலட் துல்லிய தாக்குதல் நடத்தமுடி யும். கடல் மட்டத்தில் இருந்து குறைந்த உயரத்தில் ஹெலிக்கொப்ட ரில் பறந்தபடியே இந்த தாக்குதலை நடத்தமுடியும் என்பதால், இதை ரேடார் மூலமும் கண்டுபிடிக்க முடி யாது. மேலும், இலக்கை கண்டறிந்து தாக்குதல் நடத்த அகச்சிவப்பு கதிர் தொழில்நுட்பமும் இதில் உள்ளது.

ஒடிசாவில் உள்ள சண்டிப்பூர் பரி சோதனை மையம் அருகே இந்த ஏவுகணை சோதனை கடந்த செவ் வாய் கிழமை மேற்கொள்ளப்பட்டது.

அப்போது கடலில் நிறுத்தப்பட் டிருந்த சிறிய கப்பல் இலக்கை, ஏவு கணை துல்லியமாக தாக்கியது. இந்த வெற்றிகர சோதனைக்காக டிஆர்.டி.ஓ. மற்றும் இந்திய கடற்படை மற்றும் ஏவுகணை தயாரிப்பில் ஈடு பட்டவர் களை பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டியுள்ளார்.



# பாகிஸ்தான் மதரஸாவில் குண்டுவெடிப்பு; 5 பேர் பலி

பாகிஸ்தானிலுள்ள மதரஸாவில் நடந்த குண்டுவெடிப்பில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். 10 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணம் அக்கோரா கட்டக் மாவட்டத்தில் தலிபான் நடத்தும் மதரஸா பாடசாலை ஒன்று உள்ளது. இந்த மதரஸா வளாகத்தில் மசூதி அமைந்துள்ளது. இந்த மதரஸாவில் நேற்று வெள்ளிக்கிழமை என்பதால் ஏராளமானோர் வளாகத்தில் கூடியிருந்தனர். இந்நிலையில் பிற்பகல் நேரத்தில் குண்டுவெடிப்பு நடந்தது.

இந்த குண்டுவெடிப்பு தாக்குதலில் மசூதியில் வழிபாடு நடத்திய 5 பேர் உயிரிழந்தனர். மேலும், 10 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அவர்கள் அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்து பொலிஸார் விரைந்து சென்று மசூதி வளாகத்தில் விசாரணை நடத்தி வருகின்றனர். ரம்ஜான் நோன்பு தொடங்கவிருக்கும் நேரத்தில் மசூதியில் குண்டுவெடிப்பு நடத்தப்பட்டது பெரும் பரபரப்பை கைபர் பக்துன்கவா மாகாணத்தில் ஏற்படுத்தியுள்ளது.

இந்த தாக்குதலுக்கு இதுவரையில் எந்த தீவிரவாத அமைப்பினரும் பொறுப்பு கூறவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





# பெரும் சர்ச்சையில் முடிந்த ட்ரம்ப் - ஜெலன்ஸ்கி பேச்சு

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி ஆகியோர் போரை முடிவுக்கு கொண்டு வர நடத்திய பேச்சு பாரிய சர்ச்சையில் முடிவடைந்ததாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ட்ரம்ப் - ஜெலன்ஸ்கி இடையே வெள்ளையை மாளிகையில் நடந்த சந்திப்பு கடுமையான வார்த்தை மோதல்களில் முடிந்து உள்ளது.

அதனையடுத்து பொருளாதார ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமலும் வெள்ளை மாளிகையில் நடந்த விருந்தில் பங்கேற்காமலும் ஜெலன்ஸ்கி வெள்ளை மாளிகையில் இருந்து வெளியேறினார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சந்திப்பில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை ட்ரம்ப் கடுமையாக சாடினர், நீங்கள் இலட்சக்கணக்கான உயிர்களோடு விளையாடுகிறீர்கள்?

நீங்கள் இந்த நாட்டை அவமதிக்கிறீர்கள்; 350 பில்லியன் டொலர்களை அமெரிக்கா உங்களுக்காக செலவு செய்தது என ட்ரம்ப் கடுந்தொனியில் சாடியுள்ளார்.

உங்கள் வீரர்கள் அமெரிக்க போர் கருவிகளை வைத்தே சண்டையிட்டனர். அது மட்டும் இல்லை என்றால் போர் 1 வாரத்தில் முடிந்திருக்கும்.

ரஷ்யா உடன் போரில் உக்ரைன் வெல்லப்போவதில்லை. உக்ரைன் ஜனாதிபதியால் ஜெலன்ஸ்கியால் 3ம் உலக போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது என நேரடியாக கடுந்தொனியில் டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

கனடா முரசு

சனிக்கிழமை 01/03/2025

## டக் ஃபோர்டுக்கு மீண்டும் வெற்றி

அமெரிக்காவின் வரி அச்சுறுத்தலால் ஒன்டாரியோ பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்படலாம் என்ற சூழ்நிலையில் நடத்தப்பட்ட திடீர் தேர்தலில், 02▶



# ட்ரம்பின் கொள்கைளால் மீண்டும் ஆட்சிக்கு வரும் ட்ரூடோவின் கட்சி

**அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் வரி விதிப்பு மிரட்டலை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு லிபரல் கட்சி மீண்டும் ஆட்சியை கைப்பற்றலாம் என்ற சூழல் தற்போது கனடாவில் உருவாகியுள்ளது.**

**கனடாவின் லிபரல் கட்சி, நான்கு ஆண்டுகளில் முதன்முறையாக கன் சர்வேடிவ் கட்சியை பின் தள்ளி, பிரமிக்க வைக்கும் வகையில் மீண்டும் வந்துள்ளது.**

சமீபத்திய Ipsos ஆய்வுகளின் அடிப்படையில், லிபரல் கட்சி தற்போது கன்சர்வேடிவ் கட்சியை விட 2 சதவிகிதம் முன்னிலை பெற்றுள்ளனர். ஆறு வாரங்களுக்கு முன்பு அவர்கள் 26 சதவிகிதம் பின்னடைவை எதிர்கொண்டு குறித்த மாற்றத்தை சாதித்துள்ளனர்.

லிபரல் கட்சியின் இந்த திருப்பத்திற்கு காரணம் கனடாவில் பரவி வரும் ட்ரம்ப்-எதிர்ப்பு உணர்வுகளே என ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

வர்த்தகம் மற்றும் பிராந்திய விரிவாக்கம் குறித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் உக்கிரமான நிலைப்பாடு கனேடிய மக்களின் தேசபக்திக்கு ஒரு எழுச்சியை ஏற்படுத்தியது. ட்ரம்பின் கொள்கைகளுக்கு எதிராக கனேடியர்கள் தங்கள் அரசாங்கத்தின் பின்னால் அணிதிரண்டுள்ளனர்.

# ஒன்டாரியோ லிபரல் தலைவர் பானி க்ராம்பி தோல்வியடைந்தார்

ஒன்டாரியோ லிபரல் கட்சி தலைவர் பானி க்ராம்பி, மிஸ்ஸிசாகா ஈஸ்ட்-கூக்ஸ்வில் தொகுதியில் தோல்வியடைந்துள்ளார்.

இரண்டு ஆண்டுகளாக கட்சித் தலைவராக இருந்த அவர், முன்னதாக 10 ஆண்டுகள் மிஸ்ஸிசாகா நகரத்தின் மேயராக பணியாற்றியிருந்தார்.

இந்த தொகுதியில் வெற்றி பெற்றவர், பிராம்ப்டன் மேயர் பாட்ட்ரிக் பிரவுனின் மனைவியின் தாயாரான 03▶







# இரு வாரங்களில் 16 கொள்ளைகளில் ஈடுபட்டவர் டொராண்டோவில் கைது

டொராண்டோ பெரும்பாகம் மற்றும் ஹாமில்டன் பகுதியில் இரண்டு வார காலத்தில் 16 வியாபார நிறுவனங்களில் கொள்ளையிட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெப்ரவரி 8 முதல் பெப்ரவரி 25 வரை டொராண்டோ, ஹாமில்டன், குஎல்ஃப், பீல், ஹால்டன் மற்றும் நயாகரா பொலிஸாருக்கு 16 கொள்ளை சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் 14 கொள்ளைகள் நிதி நிறுவனங்களில், மற்ற இரண்டு சில்லறை கடைகளில் நடந்தன என தெரிவித்துள்ளனர்.

குற்றவாளி தனியாக செயல்பட்டு, கத்தியை காட்டி பணம் கொள்ளையிட்டுள்ளார். சில இடங்களில் முகத்தை மறைக்க முகமூடி அணிந்திருந்துள்ளார்.

ஆறு பொலிஸ் நிலையங்கள் இணைந்து விசாரணை நடத்தியதில், ஒக்வில்லைச் சேர்ந்த அலன் ஹாக்ஸ்மா (வயது 52) என்பவரை டொராண்டோ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஆயுத முனையில் 16 கொள்ளைகள், 7 முறை முகமூடி அணிந்து திருட முயற்சி செய்ததமை, திருடப்பட்ட பொருள்களை வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.





## டக் ஃபோர்டுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டக் ஃபோர்ட் மற்றும் அவரது புரோகிரஸிவ் கன்சர்வேடிவ் (PC) கட்சி மூன்றாவது முறையாக பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுள்ளது.

ஃபோர்டின் பிசி கட்சி 81 இடங்களில் முன்னிலை பெற்றது, இது முன்பிருந்த 79 இடங்களின் எண்ணிக்கையை விட அதிகம். என்.டி.பி. (NDP) 26 இடங்களைப் பெற்றதால், அவர்கள் மீண்டும் ஒன்டாரியோவில் அதிகாரப்பூர்வ எதிர்க்கட்சியாக செயல்பட உள்ளனர். லிபரல் கட்சி 14 இடங்களை வென்று 2022 தேர்தலைவிட மேம்பட்ட நிலையை அடைந்திருந்தாலும், கட்சித் தலைவர் பானி க்ராம்பி (Bonnie Crombie) தனது தொகுதியில் தோல்வி அடைந்தார்.

வெற்றிக்கூட்டத்தில் தனது ஆதரவாளர்களை சந்தித்த டக் ஃபோர்டு, "ஒன்டாரியோவை பாதுகாக்க ஒரு வலுவான, வரலாற்று சிறப்புமிக்க மூன்றாவது பெரும்பான்மை ஆட்சியை நாம் உறுதிப்படுத்தியுள்ளோம்," என உரையாற்றினார்.

அவர் தனது ஆதரவாளர்களுக்கும் குடும்பத்தினருக்கும் நன்றி தெரிவித்ததுடன், எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் பாராட்டு தெரிவித்தார்.

"கொள்கைகளில் வேறுபாடு இருக்கலாம், ஆனால் ஒவ்வொருவரும் இந்த மண்ணை நேசிப்பவர்கள் என்பதை சந்தேகமே இல்லை. ஒவ்வொருவரும் கனடாவை நேசிக்கிறார்கள், இது உலகில் மிகச் சிறந்த நாடு என தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் ஒத்துழைத்து பணியாற்ற உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கனடா ஒருபோதும் அமெரிக்காவின் 51ஆவது மாநிலமாகாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# அமெரிக்காவிலிருந்து கனடாவில் குடிபெயர்ந்தவர்கள் தங்கள் பிரஜாவுரிமையை இரத்து செய்ய அதிக நாட்டம்

அமெரிக்காவிலிருந்து கனடாவில் குடிபெயர்ந்தவர்கள், தங்களது அமெரிக்கப் பிரஜாவுரிமையை இரத்து செய்ய அதிக நாட்டம் காட்டுகின்றனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக குடியேற்ற சட்டத்தரணிகள் தமது கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், கடந்த சில மாதங்களில் இதற்கான விண்ணப்பங்கள் 50 வீத உயர்வு கண்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்கப் பிரஜாவுரிமையை இரத்து செய்ய முயற்சி செய்யும் பலர், அமெரிக்காவின் தற்போதைய நிலைக்கு வெட்கப்படுகின்றோம் என தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் வாழ்வது, தொலைக்காட்சி நிகழ்ச் சிகளில் காட்டப்படுவது போல இல்லையென்று சிலர் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, 2025 அமெரிக்க தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் வெற்றி பெற்று கனடா மீது வரிகள் விதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டமை குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

மேலும், எவ்வாறெனினும் அமெரிக்க குடியுரிமையை ரத்து செய்வது நீண்ட செயல்முறை என சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



## ஒன்டாரியோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில்வியா குவால்தியேரி என்பது குறிப் பிடத்தக்கது.

தேர்தலில் தோல்வியடைந்த போதி லும், பானி க்ராம்பி தனது பதவியை தொடருவதாக அறிவித்துள்ளார்.

அவர் இந்த அறிவிப்பை மிஸ்ஸி சாகா மாநாட்டு மையத்தில் உரையாற் றிய போது தெரிவித்துள்ளார்.

லிபரல் கட்சி இம்முறை தேவை யான இடங்களை வென்று அதிகாரப் பூர்வ கட்சி அந்தஸ்தை மீண்டும் பெற்றுள்ளது.

எனினும், அதிகாரப்பூர்வ எதிர்க்கட் சியாக திரும்ப தேவையான அளவு வெற்றியை பெற முடியவில்லை. தோல்வியை ஏற்றுக்கொண்ட க்ராம்பி, தேர்தலில் கட்சியின் முன்னேற்றத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

லிபரல் கட்சி தோற்கும் என்று பலர் கருதியதாகவும், ஒன்டாரியோ லிபரல் கட்சி முடிவுக்கு வந்துவிட்ட தாகவும் தெரிவித்துள்ளார்.

நாங்கள் பெற்ற வாக்கு சதவீதம் கணிசமாக உயர்ந்துள்ளது. இது எங்களுக்கு முக்கியமான அடித்தளமாக அமைகிறது என தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட தோல்வி ஏற்பட்டாலும், கட்சியின் வளர்ச்சிக்காக தொடர்ந்து பணியாற்றுவேன் என க்ராம்பி உறுதி யளித்தார்.